219958

# உயிர் தோழர்

JL
[illegible] N96UT
N96
219958

FRIEND IN-NEED உயிர் தோழர்

20—7—1996 & 5—8—96 ● Rs. 2-00

## தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்களிடம் மஹாபாரத மஹாஜன சபையின் மூன்று கோரிக்கைகள்

1 முதல்வரின் ஆர்வத்தால் தமிழாக்கம் செய்யப்பட்ட இந்திய அரசமைப்பின் முகப்புரை 12ம் பக்கம் உள்ளது. இதில் "சமயச்சார்பற்ற" என்ற சொல்லுக்குப் பதிலாக திருக்குறளின் 4 வது அதிகாரத்தின் தலைப்பை என்றும் நினைவு கூறும் வகையில் 'அறன் வலியுறுத்தும்' என்ற தமிழ்ச் சொல்லை சேர்க்கவும் ஆங்கிலத்தில் இதற்கு ஈடான சொல்லைச் சேர்க்கவும முதல்வர் முயலவேண்டும என்பது நமது முதல் கோரிக்கை

2 திருவாரூர் தேரழகை உலகினர் வியந்து பார்க்கும் வகையில் வள்ளுவர் கோட்டத்தில் வடிவமைத்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் (1) கன்றை இழந்த பசுவின் துயர் துடைக்க தம் மகனையே தேர்க்காலில் கிடத்தி நீதி காத்த நிகழ்ச்சியையும் வள்ளுவர் கோட்டத்து தேர்க்காலில் சித்தரித்து தமிழரசர்களின் பெருமையையும் உலகோர் அறியச் செய்ய வேண்டும் என்பதும் (2) வளளுவர் கோட்டத்தின வளாகத்திலோ அருகிலோ அரசுப்பராமரிப்பில் ஓர் கோசாலையை நிறுவிடவேண்டும் என்பதும் (3) வள்ளுவரின் "நன்றாகு மாக்கம் பெரிதெனினுஞ் சான்றோர்க்குக் கொன்றாகு மாக்கங்கடை" என்ற 328 வது குறளுக்கிணங்க பொள்ளாச்சிக்கருகில் பசு இறைச்சி பதனிடும் நிலையம் அமைய உரிமம் வழங்கப்படுவதைத் தவிர்க்க வேண்டும் என்பதும் நமது இரண்டாவது கோரிக்கை

3 வளளுவர் கோட்டத்தின் முன்பு அண்ணா சிலைக்குக்கீழே 735வது குறளை ஒரு கல்வெட்டில பொறிக்கச்செய்து அதனுடன் அண்ணாவின் பொன்மொழிகளான (1) "திருவள்ளுவர் பிறந்த நாட்டிற்கு உரியவர்கள் நாம். அவர் வாழ்ந்த மண்ணில் வாழத்தக்கவர்கள் நாம என்பதைப் பேச்சினால் அல்ல செயலினால் மெய்ப்பித்துக் காட்ட வேண்டும் (2) ஜனநாயகம் வளர்ந்து முழுமை பெறும்போது கட்சிகளுக் கிடையே காணும் கொள்கை வேறுபாடு சிறுத்துவிடும்" என்ற இரண்டையும் கூட அதே கல்வெட்டில் பொறிக்கச் செய்யவேண்டும் என்பது நமது 3வது கோரிக்கை

...கைகள் முதல்வரின் கவனத்திற்குக்கொண்டு போகப் ...மூலம் இக்கோரிக்கைகளை மஹாபாரத மஹாஜன ...ண்டே இருக்கும். முதல்வர் முயன்றால் முன்றையும ...பது நமது நம்பிக்கை

JL
21, N96UT.
N96.
2.19958

## குடியிருப்போர் நலவாழ்வு சங்கங்களுக்கே (RWA) பஞ்சாயத்து அந்தஸ்து Residents Welfare Associations will be the basic unit of administration

மத்திய மாநில தேர்தல் கமிஷன்களின் பதிவு பெற்ற மஹாபாரத மஹாஜன சபை (MMS) ஒரு புதிய (மாதிரி) அரசமைப்பை வடிவமைத்துள்ளது. இது கட்சி அரசியலற்ற மக்களாட்சி மலர வழி வகை செய்கின்றது. தேசீய அளவில் நாடாளு மன்றத்தில் இரு அவைகளும் மாநில அளவில் சட்ட மன்றத்தில் இரு அவைகளும் இருப்பது போல உள்ளூராட்சி மட்டத்தில் மூன்று அவைகள் தேவை என்பது MMSன் கருத்து. கிராம / நாட்டுப்புறமானாலும் சரி நகரப்புறமானாலும் சரி நாடு முழுதும் மூன்று அடுக்கு நகராட்சியே அமையவேண்டும் என்ற விதத்தில் பஞ்சாயத்து யூனியனும் பஞ்சாயத்தும் நகராட்சியின் 2வது 3வது அவைகளாக விளங்கும் என புதிய அரசமைப்பு கூறுகிறது. தேசீய, மாநில உள்ளூராட்சி மட்டத்தில் மொத்தம் 7 அவைகள். அவை

| | அவைகளின் பெயர் | நிலை | பதவிப் பெயர்கள்: தலைவர் | பதவிப் பெயர்கள்: உறுப்பினர் | 7 அவைகட்கும் பொதுப்பதவிகள் 13 | இதர பதவிகள் |
|---|---|---|---|---|---|---|
| | நாடாளு மன்றம் | தேசீய | | | | 18 POI ஜனாதிபதி<br>17 VPI துணை ஜனாதிபதி<br>16 PM பிரதம மந்திரி<br>15 GDZ மண்டல ஆளுநர்<br>14 CM மாநில முதல்வர் |
| 1 | லோக சபை | | 10 SLS | 7 MPL | | |
| 2 | ராஜ்ய சபை | | 12 CRS | 9 MPR | | |
| | சட்ட மன்றம் | மாநில | | | | |
| 3 | பேரவை | | 11 SLA | 6 MLA | | |
| 4 | மேலவை | | 13 CLC | 8 MLC | | |
| | நகராட்சி | உள்ளூர் | 3 MCH | | | |
| 5 | மைய மன்றம் முதல் அவை | | &2 MVC | 5 MLB | | |
| 6 | கோட்ட மன்றம 2ம் அவை | | 5 MLB | 4 MPU | | |
| 7 | கிளைக் கோட்ட மன்றம 3வது அவை | | 4 MPU | 1 PCR | | |

7வது அவையின் தலைவர் 6வது அவையின் உறுப்பினருமாவார் 6வது அவையின் தலைவரே 5வது அவையின் உறுப்பினருமாவார் 6வது அவைக்கு பஞ்சாயத்து யூனியன் எனவும் 7வது அவைக்கு பஞ்சாயத்து என்ற பெயரும் உண்டு. 7வது அவையின் கூடுதல் பெயர் "குடியிருப்போர் நலவாழ்வு சங்கம்" என்கிறது MMS.

Details: 1 People's committe & Panchayat Council Representative 2 Municipal Vice Chairman 3 Municipal Chairman 4 President of Panchayat & Ex officio Member, Panchayat Union Council 5 President, Panchayat Union Council & Ex-officio Member, Local body i e Main Municipal Council 6 Member Legislative Assembly 7 Member, Parliament (Loksabha) 8 Member, Legislative Council 9 Member, Parliament (Rajya Sabha) 10 Speaker, Loksabha 11 Speaker, Legislative Assembly 12 Chairman, Rajya Sabha 13 Chairman, Legislative Council 14 Chief Minister 15 Governor (Development Zone) & Lok Ayukta 16 Prime Minister 17 Vice President of India & Lok Pal 18 President.

(தொடர்ச்சி 15 பக்கம்)



## நாம் எல்லோரும் இந்நாட்டு மன்னர்

(மகாகவி பாரதியார்)

ராகம்—பியாக் தாளம்—திரை ஏகதாளம்

### பல்லவி

பாரத சமுதாயம் வாழ்கவே !—வாழ்க வாழ்க !
பாரத சமுதாயம் வாழ்கவே !—ஜய ஜய ஜய !(பாரத)

### அனுபல்லவி

* முப்பது கோடி ஜனங்களின் சங்கம்
முழுமைக்கும் பொது உடைமை
ஒப்பி லாத சமுதாயம்
உலகத் துக்கொரு புதுமை-வாழ்க ! ..

### சரணங்கள்

மனித ருணவை மனிதர் பறிக்கும்
வழக்கம் இனியுண்டோ ?
மனிதர் நோக மனிதர் பார்க்கும்
வாழ்க்கை இனியுண்டோ ?—புலனில்
வாழ்க்கை இனியுண்டோ ? நம்மிலந்த
வாழ்க்கை இனியுண்டோ ?

இனிய பொழில்கள் நெடிய வயல்கள்
எண்ணரும் பெருநாடு
கனியும் கிழங்கும் தானி யங்களும்
கணக்கின்றித் தருநாடு—இது
கணக்கின்றித் தருநாடு—நித்தநித்தம்
கணக்கின்றித் தருநாடு வாழ்க ! (பாரத)

இனியொரு விதிசெய்வோம்—அதை
எந்த நாளும் காப்போம்
தனியொருவனுக் குணவிலை யெனில்
ஜகத்தினை அழித்திடு வோம்—வாழ்க !

எல்லா உயிர்களிலும் நானே யிருக்கிறேன்
என்றுரைத்தான் கண்ண பெருமான்
எல்லாரும் அமரநிலை எய்துமநன் முறையை
இந்தியா உலகிற் களிக்கும்—ஆம்
இந்தியா உலகிற் களிக்கும்—ஆம் ஆம்
இந்தியா உலகிற் களிக்கும் வாழ்க ! ..

எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓரினம்
எல்லாரும் இந்திய மக்கள்
எல்லாரும் ஓர்நிறை எல்லாரும் ஓர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர்—நாம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்—ஆம்
எல்லாரும் இந்நாட்டு ! மன்னர்—வாழ்க ! ..

* இப்பாடலில் பாரதி காணும் கனவிகள இறையருள் கலந்த மக்களின் ஒத்துழைப்புடன் MMS என்ற மஹாபாரத மஹாஜன சபை நிறைவேற்றும். முப்பதுகோடி என்பதற்கு பதிலாக பாரதநாட்டு என்ற வார்த்தையுடன் இப்பாடல் MMSன் நிகழ்ச்சிகளில் பாடப்படுகின்றது.

219958

# சமர்ப்பணாவின் நிறைவான பணி

பிரபல டாக்டர் திரு நஞ்சுண்ட ராவ் அவர்களின் தலைமையில் இயங்கும் சமர்ப்பணா ட்ரஸ்ட் 2-4-95 முதல் வடசென்னை கொளத்தூர் (சென்னை 600 099) பகுதியில் கொளத்தூர், கொரட்டூர் மற்றும் மாதவரம் கிராமங்கள் இணையும் ஆசிரியர் காலனியில் 5வது மெயின் ரோடில் 3வது லே அவுட்டில் 36ம் எண்ணுள்ள கட்டிடத்தில் நெஸ்ட் (THE NEST) என்கிற பள்ளியை ஸ்பாஸ்டிக்ஸ் குழந்தைகளுக்காகவும் ரெயின்போ (THE RAINBOW) என்கிற பள்ளியை மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்காகவும் நடத்தி வருவது யாவரும் அறிந்ததே கிண்டி கத்திப்பாரா சந்திப்பிலிருந்து செங்குன்றம் செல்லும் உள் வட்டச்சாலையில் சிவானந்த நகர், மற்றும் இரட்டை ஏரி என்கிற பஸ்ஸ்டாப் அருகே உள்ளது சமர்ப்பணா சேவா நிலயம் நடத்திவரும் விடுதியுடன் கூடிய பள்ளிகள். இவ்விரு பஸ்ஸ்டாப்களின் வழியேயும், பாரிமுனையிலிருந்து 42-C, பஸ்ஸில் ஏறி ஆசிரியர் காலனி என்கிற பஸ் ஸ்டாப்பில் இறங்கியும் சமர்ப்பணாவை அடையலாம்.

இப்பள்ளிகளின் முதலாண்டு நிறைவு விழாவை சமர்ப்பணா 29—6—96 சனிக்கிழமையன்று பள்ளிக்கருகில் ஒரு விளையாட்டுத் திடலில் நடத்தியது. திரைப்பட நடிகை திருமதி ரேவதி சுரேஷ் அவர்கள் சிறப்புவிருந்தினராக கலந்துகொண்டு ஊனமுற்றவர்களை புறக்கணிக்காமல் சமுதாயத்தினை பயனுள்ளவர்களாக ஆக்கி விட வேண்டியதன் அவசியத்தை நினைவுபடுத்தினார். பிரமுகர்கள் டாக்டர் மோகன் ரெட்டி, சென்னை தொலைக்காட்சியைச்சார்ந்த திரு பாலரமனி, சேவாலயா நிர்வாக டிரஸ்டி திரு முரளி, சென்னை பெருநகர் கிழக்கு அரிமா நங்கையர் சங்கத்தலைவர் திருமதி பேபி குட்டியம்மா, எக்ஸ்னோரா பெண்கள் அமைப்பின் தலைவர் திருமதி சுலோசனா ராமசேஷன், நட்சத்திர விருந்தினராக டெல்லி கணேஷ் மற்றும் மஹாபாரத மஹாஜன சபையின் பொதுச் செயலாளர் திரு K. R. சுவாமிநாதன் ஆகியோரும் விழாவில் பங்குபெற்று சமர்ப்பணாவின் சேவைகளை பாராட்டிப பேசினார்கள். திருமதி சுலோசனா ராமசேஷன் அவர்கள் அன்றே ப்ரொவிஷன் நன்கொடையை அளித்தார். திருமதி குட்டியம்மா அவர்கள் சமையல் எண்ணெயை மாதா மாதம் நன்கொடை தருவதாக கூறினார்கள்.

இவ்விழாவில் கலைநிகழ்ச்சியை நடத்திக்காட்டிய சமர்ப்பணாவின் குழந்தைகள் தங்கள் நடிப்பின் மூலம் இவர்களுக்காகவே தங்களை அர்ப்பணித்துக் கொண்டு செயல்படும் திரு ஸ்ரீதர், திருமதி பவானி ஸ்ரீதர் இருவரின் ஆக்கபூர்வமான நிறைவான உழைப்பை அனைவருக்கும் அறியச் செய்தனர். இக்குழந்தைகள் தன் தேவைகளை தானே கவனித்துக் கொள்ளுமளவிற்கு இவர்களைத் தயார் செய்துள்ள ஸ்ரீதர் தம்பதியரைப் பாராட்டி உதவிவருபவர்களில் ஆசிரியர் காலனி வாசிகளைப் பற்றி குறிப்பிடாமல் இருக்கமுடியாது. திரு செல்வம் குடும்பத்தினர், மாநகராட்சி கல்வி அலுவலர் திருமதி வித்யாவதி, திரு லெக்ஷ்மணன் இப்படி நீளும்பட்டியல் அது. இன்னும் பல மாணவ மாணவியரின் கலை நடன நிகழ்ச்சிகளும் நடைபெற்றது இவர்கட்கெல்லாம் மறவாமல் பெயர் கூறி நிகழ்ச்சி நிரலை முழுமையாக அளித்த பெருமை திருமதி ஜாய்ஸ் கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கே.





# RAJAJI'S RAMAYANA

With Grateful acknowledgements to the author (late)
C. Rajagopalachari and publishers
Bharathiya Vidya Bhavan, Bombay

Chapters IV & V appeared in our issue
dt. 5-4-96 & 20-4-96

## Chapter-VI-Seeta

JANAKA, king of Mithila, was an ideal ruler. He was a much-revered friend of Dasaratha who when he planned his yaaga for progeny sent not mere messengers but ministers to Mithila to invite King Janaka.

Janaka was not only a brave king but was as well versep in the *Saastras and Vedas* as any rishi and was the beloved pupil of Yaajnavalkya whose exposition of Brahmajnaana to him is the substance of the Brihadaaranyakopanishad. In the Bhagavad Gita, Sri Krishna cites Janaka as an illustrious example of the Karma yogin Janaka was thus worthy to be the father of Seeta who was to be the wife of Vishnu come down on Earth in human form.

Desirous of performing a yaaga, Janaka at one time ploughed the chosen site As usual this was done by his own hand.

As the field was being cleared and levelled, Janaka saw among shrubs a baby divinely beautiful. Janaka was childless and accepted the infant as the goddess Earth's gift to him.

Taking the child in his arms he went to his beloved wife and said: ' Here is treasure for us. I found this child on the yaaga site and we shall make it our own.'' And she joyfully consented.

The beauty of the goddess Earth mortal eyes cannot see in its fulness. but we get glimpses of it as we gaze with grateful hearts on the emerald green or golden ripeness of spring-tide or autumn fields, or with awe and adoration on the glories of mountain and valley, rivers and ocean. This loveliness was Seeta in its entirety. Kamban would have it that Seeta's beauty threw into the shade Lakshmi herself who came up with Nectar as the Ocean of Milk was being churned. This child of divine beauty was brought up by King Janaka and his dear queen

When Seeta reached the age of marriage Janaka was sad that he would have to part with her, Though he tried hard he was for long unable to choose a prince worthy of Seeta. Many kings came to Mithila, seeking Seeta's hand, but in Janaka's view none of them was good enough. The King anxiously thought over the matter and came to a decision.

Long ago, pleased with a yaaga performed by Janaka, Varuna presented to him Rudra's bow and two quivers. That was an ancient heavenly bow which no ordinary man could even move. This was kept by him as an honoured heir-loom. Since only a very exceptional man could be considered worthy of Seeta Janaka issued this proclamation: "Seeta, my daughter, will be given in marriage to the prince who can lift bend and string the bow of Siva which Varuna gave me and to none other."

Many princes who had heard of Seeta's beauty, went to Mithila only to return disappointed. None could fulfil the condition.

Led by Viswaamitra, the rishis from Siddhaashrama were proceeding to Mithila, with bullock carts transporting their luggage. The animals and the birds in the aashrama set out to follow Viswaamitra, but he gently bade them stay behind.

It was evening when they reached the river Sona. There they rested for the night. Viswaamitra recounting to Raama and Lakshmana the history of the place Getting up in the morning, they continued their journey and crossed another river, not very deep, and by noon they were at the Ganga

They bathed in the holy river and the rishis made lustrations; to their forbears They improvised an aashrama there, performed their pujas and cooked their food. Meal over, they sat round Viswaamitra who, at the request of the two princes, told the story of the Ganga.

Himavaan, king of mountains and his spouse, Manorama, had two daughters of whom Ganga was the elder Himavaan sent her to the land of the Devas in response to their request and she dwelt with them. Uma, the younger, won the favour of Siva and became his spouse.

*Sagara* a former King of Ayodhya had no son for long. With his two wives, Kesini and Sumati he went to Himaalaya and performed tapas. Sage Bhrigu, pleased with the king, blessed him and said: "You will get a number of children and will acquire undying fame One of your wives will give birth to an only son, and through him your lineage will be continued The other queen will bear sixty thousand strong armed sons."

Sagara's wives bowed low before the sage and asked which one of them would get an only son and which the sixty thousand children. Sage Bhrigu asked each of them their own desire.

Kesini said she would be satisfied with one son who would continue the line; Sumati chose the other alternative. "Be it so," said the sage.



Satisfied, the king and his wives took leave of the sage and returned to Ayodhya. In course of time, Asamanjas was born to Kesini; Sumati gave birth to a fissiparous mass which divided out into sixty thousand babies. This army of children was well taken care of by nurses

Years rolled by; and while the sixty thousand grew into strong, handsome princes Asamanjas turned out to be a cruel lunatic. He indulged in the pastime of throwing little children into the river and laughed merrily as they struggled and died.

Naturally people hated this maniac and banished him from the country. To the great relief of all, Asamanjas' son, Amsumaan, was the opposite of his father and was a brave, virtuous and amiable prince.

King Sagara launched a great horse sacrifice and prince Amsumaan was in charge of the sacrificial horse, but Indra, in the guise of a Raakshasa managed to carry off the animal. The Devas regarded yaagas by mortals as a challenge to their superiority, and lost no opportunity of throwing obstacles in their way. If, however, all obstruction was overcome and the yaaga was completed they accepted offerings made to them And then he who performed the yaaga got due reward.

The king was greatly upset when he heard that the sacrificial horse was stolen He sent out the sixty thousand sons of Sumati to go in search of the animal all over the earth and to spare no pains to retrieve it.

"The loss of the horse," he impressed on them, "not only means obstruction to the yaaga; it casts sin and ignominy on all, concerned. You should, therefore, recover the horse, wherever it may be kept hidden."

Eagerly the sons of Sagara proceeded to search the entire earth, but the horse was nowhere to be found. They even started digging the earth as for buried treasure, and in their anxiety respected neither place nor person and only succeeded in earning the hatred of all they met. The horse was not to be found; and when they reported their failure to the King, be bade them ransack the nether world also

The princes did as they were told and in paataala they saw the horse grazing in a corner of an aashrama not far from the place where Sage Kapila who was Vishnu sat in meditation.

The princes at once jumped to the conclusion that they had not only found the stolen horse but the thief also, and they rushed on Kapila shouting. "Here is the thief pretending to be a yogi."

Kapila thus disturbed opened his eyes and the sixty thousand princes were reduced to a heap of ashes. Indra, the real thief, had artfully left the horse here with this very intent.

(to be continued)

உ

# பெண்களுக்கும் பென்ஷன்

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்று கொன்றை வேந்தன் எனும்நூலில் கூறுகின்றார் ஔவையார் இவர் விநாயகக் கடவுள் மேல் அகவல பாடியுள்ளார். அந்த விநாயகரோ தாய் தந்தையை வலம்வந்தே உலகமுழுதும் சுற்றிவந்ததாகக் கூறி கனியைப் பெற்று விடுகின்றார். இளவல் முருகன ஆனைமுகப்பெருமானை வணங்கி வள்ளியம்மையைத் திருமணமே செய்து கொள்கின்றார் இவ்வாறு நம் நாட்டில் பெண்கட்கு என்றுமே பெருமை இருந்து வந்துள்ளது. ஆத்திச்சூடியில் ஔவை தந்தை தாய்ப்பேண் என்கின்றார் அக்காலத்தில் பெண் அறிஞர்கள் பலர் இருந்ததையே ஔவையின் வாழ்க்கை நமக்கு எடுத்துக் காட்டுகின்றது தாய்க்குமேல இங்கே யோர் தெய்வமுளதோ? தாய் பெண்ணே யல்லளோ ? தமக்கை தங்கை வாய்க்கும் பெண் மகவெல்லாம் பெண்ணேயன்றோ! என்கிறார் பாரதி. பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம என்ற பாரதி பெண்களின் கடமையையும் சுட்டிக்காட்டுகின்றார்.

காதலொருவனைக் கைபிடித்தே அவன் காரியம் யாவினும் கை கொடுத்து மாதரறங்கள் பழமையைக் காட்டிலும் மாட்சி பெறச் செய்து வாழ்வமடி என்றும் வலிமை சேர்ப்பது தாய் முலைப்பாலடா! ஞானஞ் சேர்க்கும் மனைவியின் வார்த்தைகள்-கலியழிப்பது பெண்களறம்டா! என்றும் கூறுகின்றார் படித்து வேலைக்குச் சென்று குடும்பத்தின் நிதி தேவைக்கும கை கொடுக்கும் பெண்கள மங்கையராயவர் இல்லறம் நன்கு வளர்த்ததும் இந் நாடே என்ற கவியின் குரலுக்கு ஏற்ப இன்றளவும் பெண்கள் இலலறம் பேணிக்காப்பதால்தான் இன்று நம் நாட்டில் அன்பும் பண்பும் நிலவுகின்றது வள்ளுவரின் 735 குறளின் படி நாட்டில் அரசியல் கட்சிகளற்ற மக்களாட்சிக் குடியரசை அமைக்க முயன்று வரும் மஹாபாரத மஹாஜன சபை (தேர்தல் கமிஷன் பதிவு பெற்றது) வேலைக்குப் போகாத பெண்கட்கும் பென்ஷன் கிடைக்க வகை செய்யும் குடியரசுக் குடிமக்கள் பென்ஷன் திட்டத்தை வடிவமைத்துள்ளது இதனால் பெண் சிசுக்கள் கருவிலேயே அழிக்கப்படுவதும் வயது முதிர்ந்த பெரியோர் முதியோர் இல்லத்திற்கு அனுப்பப்படும் நிலையும் மாறிவிடும் என மஹாபாரத மக்கள் சபை (MMS) நம்புகிறது மேலும் நாட்டு நிர்வாகத்தில் பெண்கள் சம பங்கு பெறும் நிலையும் தேர்தல்கள் நன் முறையில் நடைபெறவும் அறிவொளி இயக்கத்தின் நோக்கமும் முழுமையாக நிறைவேறவும் இத் திட்டம் வகைசெய்வதால் இறையருளும் பெண்களின் பேராதரவும் இத் திட்டத்திற்கு கிடைக்கும் என முழுமையாக நம்புகின்றேன்.


இங்கனம்

கே. ஆர். சுவாமிநாதன்

பொதுச் செயலாளர்

மஹாபாரத மஹாஜன சபை

சென்னை-99.




உ

# குடியரசுக் குடிமக்கள் பென்ஷன் திட்டம்

## கேள்வியும் பதிலும்

**கே 1 குடியரசுக் குடிமக்கள் பென்ஷன் திட்டம் என்றால் என்ன ?**

ப : 1 பாரதம் என்ற இந்தியா நம் நாடு. இது 15—8—1947ல் சுதந்திரம் பெற்றது 26—1—1950 முதல் குடியரசாக அறிவிக்கப்பட்டு அன்று முதல் இன்று வரை அமலில் உள்ள அரசியலமைப்புச் சட்டத்தின்படி நாட்டில் மக்களாட்சி அடிப்படையில் நிர்வாகம நடைபெறுகின்றது. நம் நாட்டில் வாக்காளர்கள் அனைவருக்கும் 58 வயது முடிந்து 59 வயது முதல் வாழ் நாள் வரை பென்ஷன் கிடைக்க வடிவமைக்கப் பட்ட திட்டம் என்று பொருள்.

**கே 2 குடிமக்களுக்கும் வாக்காளர்கட்கும் என்ன வித்யாசம் ?**

ப : 2

| | | ஜனத்தொகை | வாக்காளர்கள் |
|---|---|---|---|
| 1991 | நிலவரப்படி | 846 302 688 | 52.10 கோடி |
| 1993 | நிலவரப்படி | ,, | 52.50 கோடி |
| 1996 | நிலவரப்படி | ,, | 59.00 கோடி |

வாக்காளர்களின் எண்ணிக்கை 1996ல் 59 கோடி என்று சென்னை ஹிந்துவின் 20—3—96 தேதியிட்ட நாளேட்டிலும் CSR என்ற ஆங்கில சஞ்சிகையின் 1996 ஜூன் மாத இதழிலும் தகவல் தரப்பட்டுளளது. வாக்காளர்களின் எண்ணிக்க 1991ல 52.10 கோடி என்றும் 1993ல் 52.50 கோடி என்றும் சென்னை இந்தியன் எக்ஸ்பிரஸ் 26/28-11-1993 நாளேடு தெரிவிக்கின்றது ஜனத்தொகை 10 ஆண்டுகட்கு ஒரு முறை கணக்கிட்டு அறிவிக்கபபடுவதால் 1991ம் வருட அதிகாரபூர்வமான நிலவரம் கொடுக்கப்பட்டுள்ளது இதில் 43.92 கோடி ஆண்கள் எனவும் 40.71 கோடி பெண்கள் எனவும் கணக்கிட்டுள்ளனர். ஆனால் அதிகாரபூர்வமற்ற நம்பத்தகுந்த தகவல்களின்படி தற்போது நம் நாட்டின் ஜனத்தொகை 93.57 கோடியாகும் ஜனத்தொகை என்பது 18 வயது பூர்த்தியடையாதவர்களையும் சேர்ந்து குறிக்கும். வாக்காளர்கள என்பது 18 வயது பூர்த்தியடைந்து வாக்காளர்களாகப் பதிவு செய்து கொண்டவர்களின் எண்ணிக்கையை குறிக்கும் 18 வயது பூர்த்தியடைந்திருந்தாலும் வாக்காளர்களாகப் பதிவு செய்து கொள்ளாதவர்கள் வாக்களிக்க முடியாது அதாவது ஓட்டுப் போட முடியாது. ஒவ்வொரு குடிமகனும் குடிமகளும் 18 வயது பூர்த்தியானதும் வாக்காளர்களாகப் பதிவு பெற்று தொடர்ந்து வாக்காளர்களாக இருந்துவந்தால் 59 வயது முதல் இந்த பென்ஷனை பெற முடியும். (ஒவ்வொர் குடிமகனும் குடிமகளும் பெற முடியும்).

**கே 3 இந்த 59 கோடி வாக்காளர்கட்கும் பென்ஷன் இத் திட்டப்படி கிடைக்குமா ?**

ப : 3 கிடைக்கும். ஆனால் 59 கோடி வாக்காளர்களில் 18 வயது முதல் 58 வயது வரை உள்ளவர்கட்கு பென்ஷன் 59 வது வயது முதல்தான் கிடைக்கும்.

**கே 4 இந்த 59 கோடியில் 58 வயதைத் தாண்டியவர்கள் எவ்வளவு பேர் ?**

ப : 4 இதற்கு புள்ளி விபரங்கள் சரியாகக் கிடைக்கவில்லை ஆனால் இந்தியன் எக்ஸ்பிரஸ் சென்னை பதிப்பின் 20—6—1994 நாளேட்டின் செய்திப்படி 60 வயதையடைந்த முதியோர்களின் எண்ணிக்கை 600 லட்சம் என்றும் இவர்களில் பென்ஷன் போன்று சமூகப் பாதுகாப்புத் திட்டங்களினால் நன்மை பெறுபவர்கள் 70 லட்சம் முதியோர்கள் என்றும் பாக்கி 530 லட்சம் முதியவர்கள் நடுவீதியில் நிற்கதியாய் நிற்கின்றனர் எனும் தகவல் வெளியிடப்பட்டுள்ளது 1993 நிலவப்படி பார்த்தாலும் (கேள்வி 2) அப்போது 52.50 கோடி வாக்காளர்களில் அதாவது 5250 லட்சம் வாக்காளர்களில் சுமார் 10 சதவிகிதத்தினர்க்கு மேல் முதியோர்கள் நடு வீதியில் நிற்கின்றனர் என்பது புரியும்.

**கே 5 இவர்கள் பற்றி 20-6-1994ல் செய்தித்தாளில் விபரம் வந்தும் இவர்கள் நிலை மாறவில்லையா ?**

ப : 5 நம் நாடு 15—8—1947ல் சுதந்திரம் பெற்றது பொன் விழா ஆண்டு வந்துவிட்டது. 50 ஆண்டுகளில் 10 தேர்தல்கட்கு மேல் நடந்துவிட்டன ஒவ்வொரு தேர்தலின்போதும் 18 வயதுக்கு மேல் வேலையில்லாமல் இருப்பவர்களிடமும் இந்த 530 லட்சம முதியோர் களிடமும் கூட வேட்பாளர்கள் தவறாமல் வாக்குகளை வேண்டிப்பெற்று எம் எல ஏ பதவி, எம் பி பதவியைப் பெற்றனர் ஆனாலும் எந்த சட்ட மன்றத்திலும் நாடாளுமன்றத்திலும் நிற்கதியாய் நிற்கும் இவர்கள் பற்றி பிரச்சனை எழுப்பப்படவில்லை ஆகவே இவர்களின் பழைய நிலையும் மாறவில்லை.

**கே 6 இவர்களிடம் ஓட்டுக் கேட்டுப் பெற்ற எம் எல் ஏக்களும் எம் பிக்களும் தங்கள் ஊதியம் ஓய்வு ஊதியத்தை மட்டும் அவ்வப்போது உயர்த்திக் கொள்கின்றனரே ?**

ப : 6 நாங்கள் அரசு ஊழியர் பொதுத்துறை வங்கித்துறை போன்று பல துறையில் பணி புரிவோருக்கு கடந்த 50 ஆண்டுகளில் கமிஷன்கள் பல அமைத்து அவர்களின் ஊதியத்தையும் ஓய்வு ஊதியத்தையும் அடிக்கடி உயர்த்தி வந்துள்ளோம் இந்த 530 லட்சம் பேரும் மற்றும் வேலையில்லாதோறும் எந்த ஒரு தொழிற் சங்கம் அல்லது கட்டமைக்குள் வரவுமில்லை, வந்து பிரச்சனையை எழுப்பவுமில்லை. ஆகவே இவர்களுக்கு பிரச்சனைகள் இருப்பதாக தெரியவில்லை என நாங்கள் நம்புகிறோம் என்கிறார்களாம் எம் எல் ஏக்களும் எம் பிக்களும்.

**கே 7 நம் பிரதிநிதிகள் எந்தக்கமிஷனும் போடாமல் தம் ஊதியத்தையும் ஓய்வு ஊதியத்தையும் தாமாகவே உயர்த்திக்கொள்வது பற்றி அவர்கள் என்ன கூறுகின்றனர் ?**

ப : 7 விலைவாசி உயர்வுகாரணமாக பல கமிஷன்கள் போட்டு தொழிற் சங்கம் போன்ற கட்டமைப்புக்குள் வந்துள்ள அனைவருக்கும் கூடுமானவரை கணிசமான ஊதியம் மற்றும் ஓய்வு ஊதியம் தந்தபிறகு நாங்கள் நல்லமுறையில் பொதுப் பணி யாற்றிய வேண்டி மிகவும் குறைந்துபட்சமே கூட்டாயத்தின் நிலை காரணமாக ஊதியம் மற்றும் ஓய்வு ஊதியத்தை உயர்த்திக் கொள்கின்றோம். ஏற்கனேவே



அமைக்கப்பட்ட சம்பளக் கமிஷன்கள் ஊதியக்குழுக்களின் பரிந்துரைகளை கவனதில் கொண்டுதான் குறைந்தபட்ச ஊதிய மற்றும் ஓய்வு ஊதியங்களை தீர்மானித்துக் கொள்கின்றோம்.

**கே 8 இந்த 530 லட்சம் முதியவர்களும் குடியரசு குடிமக்கள் பென்ஷன் திட்டத்திலும் கூட கைவிடப் படுவார்களா ?**

ப : 8 இத் திட்டப்படி வாக்காளர்கள் அனைவருக்கும் பென்ஷன் கிடைக்கும் (கேள்வி 3ன் பதிலைப்பார்க்கவும்) வேலையில்லாதவர்கட்கு வேலையும் பென்ஷன் இல்லாதவர்கட்கும் பென்ஷனும் கட்டாயம் கிடைக்கவே இத் திட்டத்தில் வேலையும் பென்ஷனும் தேர்தலுடன் இணைக்கப்பட்டுளளது இத் திட்டத்தின்படி எல்லாருமே தேச சேவை செய்து பென்ஷன் பெறலாமே. அரசு ஊழியரைப் போலவே தனியார் ஊழியருக்கும் தேச சேவை செய்ய வாய்ப்பு தரப்படும்.

**கே 9 தேச சேவை என்ன ? எப்படிச் செய்வது ?**

ப : 9 நாம் ஒவ்வொருவரும் உழைத்துச் சாப்பிட வேண்டும் உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம வீணில் உண்டு களித் திருப்போரை நிந்தனை செய்வோம். விழலுக்கு நீர்ப்பாய்ச்சி மாயமாட் டோம் வெறும் வீணருக்கு உழைத்து உடலும் ஓய மாட்டோம் என்ற பாரதியின் கூற்றுப்படி நாம் ஒவ்வொருவரும் குடும்பத் தேவைக்காகவும் சுய தேவைக்காகவும் உழைக்க வேண்டும். 18 முதல் 58 வயது வரை யாவது உழைக்க வேண்டும். இதே காலத்திலேயே அதாவது 18 முதல் 58 வயதிக்குள் தேச சேவையும் செய்ய வேண்டும தேச சேவை என்பது நாட்டு நிர்வாகப்பணிகளைக் கவனிக்க ஆர்வமுடன் தேர்தலில் போட்டியிடுவது. இவ்வாறு தேர்தலில் போட்டியிட முன் வருபவர்கள் தேசீய சேவை செய்ததாகக் கருதப்பட்டு 59 வயது முதல் வாழ் நாள் வரை பென்ஷன் பெறத்தகுதி உடையவர்களாகின்றனர். உழைக்கும் காலத்திலேயே தேச சேவையிலும் ஈடுபட முயலவேண்டும ஓய்வு பெற்ற பிறகு தேச சேவை செய்தால் போதும் என நினைக்கக்கூடாது உழைப்பூதியம் பெறும்போதே ஓய்வு ஊதியத்திற்கும் நம்மை நாம் தகுதியாக்கிக் கொள்ளவேண்டும்.

**கே 10 இத் திட்டம் யாரால் வடிவமைக்கப்பட்டது ?**

ப : 10 இத் திட்டத்தை மஹாபாரத மஹாஜன சபைக்காக அதன் பொதுச் செயலாளர் வடிவமைத்தார் அவரது விலாசம் :


திரு K. R. சுவாமிநாதன்

பொதுச் செயலாளர் (தொலைப்பேசி 654655)

மஹாபாரத மஹாஜன சபை, விவேகானந்தநகர்

உள் வட்டச்சாலை, கொளத்தூர் அஞ்சல் சென்னை-99.


சென்னை அண்ணாநகர் மேற்கு பஸ் நிலையம் மற்றும் வீல்ஸ் இண்டியா, என்ற பஸ் ஸடாப் வழியே செங்குன்றம் அல்லது மாதவரம் செல்லும் R-70 114J, 170J, 115J, 121-J, ஆகிய பேருந்துகளில ஏறி, செந்தில்நகர் என்ற பஸ் ஸ்டாப்பில் இறங்கினால் மேற்படி விலாசத்திற்குச் செல்லலாம். இந்த செந்தில நகர் என்ற ஸ்டாப்பிற்கு விவேகானந்த நகர் ஸ்டாப், சிவானந்த நகர் ஸ்டாப் என்ற கூடுதல பெயர்களும் உண்டு. ஒவ்வொரு ஞாயிறும் பிற்பகல் 2 முதல் 4 மணிவரை இங்கு இச்சபையின் கூட்டம் நடைபெறும். திட்டங்கள் விளக்கப்படும்.



219958

# THE CONSTITUTION OF INDIA

## PREAMBLE

WE, THE PEOPLE OF INDIA, having solemnly resolved to constitute India into a [1][SOVEREIGN SOCIALIST SECULAR DEMOCRATIC REPUBLIC] and to secure to all its citizens:

JUSTICE, social, economic and political;

LIBERTY of thought, expression belief, faith and worship;

EQUALITY of status and of opportunity; and to promote among them all

FRATERNITY assuring the dignity of the individual and the [2][unity and integrity of the Nation];

IN OUR CONSTITUENTY ASSEMBLY this twenty-sixth day of November, 1949, do HEREBY ADOPT, ENACT AND GIVE TO OURSELVES THIS CONSTITUTION.

1 Subs. by the Constitution (Forty-second Amendment) Act. 1976. s. 2, for "SOVEREIGN DEMOCRATIC REPUBLIC" (w.e.f. 3-1-1977).

2 Subs. by s. 2, ibid., for "unity of the Nation" (w.e.f. 3-1-1977)

# இந்திய அரசமைப்பு முகப்புரை

(தமிழக அரசின மொழி பெயர்ப்பு as on 1—1—1988)

இந்திய மக்களாகிய நாம்,

இந்தியாவை ஒரு பேரரசாண்மை வாய்ந்த சமநலமை நெறிசார்ந்த. சமயச்சார்பற்ற, மக்களாட்சிக் குடியாசாக அமைக்கவும் அதன் குடிமக்கள் அனைவருக்கும்,

சமுதாய, பொருளாதார மற்றும் அரசியல் நீதியும், சிந்தனையில், சிந்தனை வெளிப்பாட்டில், நம்பிக்கையில், பற்றாாவத்தில் மற்றும வழிபாட்டில் தன்னுரிமையும், தகுநிலையில் மற்றும் வாய்ப்பில் சமன்மையும் உறுதியாகக் கிடைக்கச்செய்யவும,

தனியொருவரின் மாண்புக்கும், நாட்டின் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் உறுதியளிக்கும் உடன்பிறபபுணர்வை அவர்கள் அனைவரிடையே வளர்க்கவும், விழுமியமுறைமையுடன் உறுதிபூண்டு,

1949 நவம்பர் இருபத்து ஆறாம் நாளாகிய இன்று நம்முடைய அரசமைப்புப் பேரவையில், ஈங்கிதனால், இந்த அரசமைப்பை ஏற்று, சட்டமாக இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.

• (தொடரும்)

# 6 மஹாபாரத மஹாஜன சபை (MMS)

### கே 1 மஹாபாரத மஹாஜன சபை என்பது என்ன ?

ப : 1 மஹாபாரத மக்கள் கட்சி என்பதன் புதிய பெயர்தான் மஹாபாரத மஹாஜன சபை. 1987 முதல் கட்சி அரசியலைக் கை விடுவோம், காந்தி வழி, குறள் வழி அரசு அமைப்போம் என கூறி வருகின்றது மஹாபாரத மக்கள் கட்சி, கட்சி அரசியலைக் கைவிடு வோம் எனக் கூறி வரும் அமைப்பின் பெயரிலேயே கட்சி என்ற சொல் இருப்பதை பலரும் சுட்டிக்காட்டி மஹாபாரத மஹாஜன சபை எனபது உட்பட பல மாற்றுப் பெயர்களை பரிந்துரைத்தனர் இறுதியாக 9—8—1993 முதல் இந்தியத் தேர்தல் கமிஷனின் ஒப்புதலோடு மஹாபாரத மக்கள் கட்சி தன்பெயரை மஹாபாரத மஹாஜன சபை (MMS) என மாற்றி பதிவு செய்துகொண்டது.

### கே 2 பெயர் மாற்றத்தின்போது கொள்கைகளில் மாறுதல் ஏற்பட்டதா ?

ப : 2 இல்லை. பெயரைத் தவிர மஹாபாரத மக்கள் கட்சியின் நோக்கங்கள், கொள்கைகளையே மஹாபாரத மஹாஜன சபை பின்பற்றி வருகின்றது. இது அரசியல் மற்றும் சமூக விழிப்புணர்வை பாரத மக்களிடையே ஏற்படுத்தி வருகின்றது இதன் கொள்கைகளை 3 10ம் பக்கத்தில் உள்ள பாரதியின் பாடல் தெளிவாக்குகின்றது எனலாம்.

### கே 3 மஹாபாரத மஹாஜன சபையின் முக்கிய நோக்கங்கள் கொள்கைகள் பற்றி சிறிது அறியலாமா?

ப : 3 (அ) தாராளமாக, நம் அரசமைப்பின் முகப்புரையை சரியாகப் படித்து புரிந்து கொண்டால் பாரத மக்களிடையே அரசியல் கட்சிகள் கூடாது என்பதை நம் முகப்புரை (Preamble) தெளிவாகக் கூறியுள்ளதை புரிந்துகொளளலாம் (ஆ) மேலும் 26-1-1950முதல இன்று வரை அமலில் உள்ள நம் அரசமைப்புச் சட்டத்தில் 1—3—1985 ஆம் ஆண்டு முதல பத்தாம் இணைப்புப் பட்டியல் (Tenth schedule) சேர்க்கப்படும் வரை சுமார் 15 ஆண்டுகட்கு கட்சி என்ற பெயரே இடம் பெறவில்லை என்பதை நாம் அறிந்துகொள்ள முயலவேண்டும்.

(இ) அரசமைப்பின 102 (2), 191 (2) ஆகிய உறுபபுக்களின் (articles) அடிப்படையில் நம் அரசமைப்பில் அங்கமாக்கபபட்ட பத்தாம் இணைப்புப் பட்டியல் (10th schedule) அரைகுறையான குறைபாடுளள சட்டம் என 1—6—1993 அன்று நாடாளு மன்ற மக்கள் பேரவையின் சபாநாயகர் திரு சிவராஜ் V. பாட்டீல் அவர்களே சொல்லிவிட்டார் நாட்டின் அனைத்து மாநில சட்ட மன்றப் பேரவை களின் சபாநாயகர்களின் கூட்டுக் கூட்டத்தை 25—6—1993 அன்று சென்னையில துவக்கிவைத்து உரையாற்றிய திரு சிவராஜ் பாட்டீல் அவர்கள் கட்சித்தாவல் தடுபபுச் சட்டம் மறுபடி முழுமையாக பரிசீலிக்கப்பட வேண்டும் எனறும் கூறினார்.

(ஈ) இவற்றை யெல்லாம் கருத்தில் கொண்டும திருவள்ளுவர் 735வது திருக்குறளில் கூறியுள்ள அறிவுரைக்கிணங்கவும் நம நாட்டில் கட்சி அரசியலற்ற மக்கள குடியரசை அமைத்து அகில உலகுக்கும் முன்னோடியாக பாரதம் விளங்க முடியும் என மஹாபாரத மஹாஜன சபை கூறிவருகின்றது.

**கே 4 திருவள்ளுவரின் 735 வது குறள் என்ன ? அதன் கருத்து என்ன ?**

ப : 4 நாடு என்ற அதிகாரத்தில் 735 வது குறள் "பல் குழுவும் பாழ்செய்யு முட்பகையும் வேந்தலைக்குங் கொல் குறும்பு மில்லது நாடு" - குடிகளுக்குள் பல கட்சிகளும் நாட்டை பாழாக்கிவிடக்கூடிய உடனிருக்கும் துரோகிகளும் அரசாங்கத்தை அலைக்கழிக்கும் இரகசியக் கூட்டங்களின் கொலைமிகுந்த அராஜகமும் இல்லாதது நல்ல நாடு" என்பது இக் குறளின் கருத்து.

**கே 5 இக் கருத்தை கூறியவர் யார் ?**

ப : 5 இக் கருத்தை நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை அவர்கள் தமது திருக்குறள் புது உரை எனும் நூலில் கூறியுள்ளார்கள் இப்புது உரையை ராஜாஜி, தமிழ் முனிவர் திரு வி. கல்யாணசுந்தரனார், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை கலைக்களஞ்சியம் ஆசிரியர் திரு மப பெரியசாமிதூரன், சொல்லின் செல்வர் திரு ராபி சேதுப் பிள்ளை, பேராசிரியர் புலவ ரேறு திரு அ. வசன நஞ்சைய பிள்ளை மற்றும் பேராசிரியர் அ. சீனிவாச ராகவன் ஆகியோர் பாராட்டியுள்ளனர். (மயிலை இன்பநிலையம் பதிப்பு 1954).

**கே 6 இந்திய அரசமைப்பின் முகப்புரை என்ன ?**

ப : 6 இந்திய அரசமைப்பின் முகப்புரை (Preamble) ஆங்கிலம் மற்றும் தமிழில் இப் புத்தகத்தின் 12ம் பக்கம் காணலாம்.

**கே 7 இந்த முகப்புரையின் நோக்கத்தை MMS நிறை வேற்றுமா ?**

ப : 7 நம் தற்போதய அரசமைப்பின் (1) அதாவது அரசின் கொள்கையினை வழிச் செலுத்தும் நெறிகள் Directive Principles of State Policy பகுதியில் கூறப்பட்டுள்ளவற்றையும் (2) முகப்புரை (Preamble) பகுதியின் நோக்கங்களையும் புதிய அரசியலமைப்பின் மூலம் பூரணமாக நிறைவேற்ற வேண்டும் என்ற கொள்கையுடன்தான் மஹாபாரத மக்கள் கட்சியே (தற்போது மஹாபாரத மஹாஜன சபை) துவக்கப்பட்டது ஏனெனில் இவ்விரு பகுதிகளுமே நம் சுதந்திரப் போராட்ட வீரர்களின் எண்ண அலைகளையும் லக்ஷியங்களையும் பிரதி பலிப்பதாக MMS கருதுகிறது ஆகவே புதிய அரசமைப்பை வடிவமைத்துள்ளது காந்திஜீ 1931ல் இரண்டாவது வட்ட மேஜை மாநாடடுக்கு லண்டனுக்குச் செல்ல புறப்படும் சமயம் இந்தியாவின் அரசமைப்பு எப்படி இருக்கவேண்டும் என தன் விருப்பத்தை வெளியிட்டார். அதை முழுமையாக MMS வடிவமைத்துள்ள புதிய (மாதிரி) அரசமைபு நிறைவேற்றும் இதன் சிறப்பு அம்சங்கள் பற்றி தனிப்பட்டோரும் அமைப்புக்களும் தத்தம கருத்துக்களைக் கூறுவதுடன் மிகவும் சரியானவிதத்தில் அமைந்துள்ளது என பாராட்டையும தெரிவித்து வருகின்றனர். இவர்களின ஆதரவும் சீரிய கருத்துக்களும் புதிய (மாநில) அரசமைப்பை மிகச் சிறப்பான முறையில் அமையச் செய்யும என MMS கருதுகின்றது.



- (தொடரும்)

219958

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பஞ்சாயத்து (RWA): நாடு முழுதும் ஜாதி, மத, இன, மொழி, கல்வி, தொழில், பொருளாதார, சமூக அந்தஸ்து, வர்க்கம் முதலிய பேதங்கள் ஏது மின்றி 50 ஆண மற்றும் 50 பெண் வாக்காளர்கள் உள்ளிட்ட ஒவ்வொரு 100 குடிமக்களுக்கும் ஒரு RWA அமையும் ஒரு பல மாடிக்கட்டிடத்தில் 500 வாக்காளர்கள் இருந்தாலும் ஒரே தெருவில் 500 வாக்காளர்கள் இருந்தாலும 5 RWA அமையும் என புதிய அரசமைப்பு கூறுகின்றது. ஒவ்வொரு RWAக்கும் 100 வாக்காளர் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சிலர் அடுத்தடுத்த வெவ்வேறு RWAக்களின் உறுப்பினராகும் வாய்ப்பும் உளது. இவர்கள் 20 குழுக்களாக பிரிந்து செயல்படுவர். ஒவ்வொரு RWAயிலும் 10 ஆண்கள் குழுவும் 10 பெண்கள் குழுவும் இருக்கும் ஒவ்வொரு குழுவிலும் 5 உறுப்பினர் இருப்பர். ஒவ்வொரு குழுவும் ஒவ்வொரு ஆண்டும் ஐவருள் ஒருவரை பிறந்த தேதி சீனியாரிடிப்படி நிர்வாகக் கமிட்டி அதாவது பஞ்சாயத்து கவுன்சில் / போர்டு உறுப்பின ராக நியமிக்கும். இப்பிரதிநிதி PCR எனப்படுவார். பதவிக்காலம் ஒரு ஆண்டு. PCR பதவி RWAன் உறுப்பினர் 100 பேருக்கும் 5 வருடங் களில் கிடைக்கும். வாக்காளர் ஒவ்வொருவரும் தாம் வசிக்குமிடத்திற்கு அருகில் உள்ள RWAன் உறுப்பினராவது கட்டாயமாக்கப்படும் இதுவே வாக்காளர் பதிவு அலுவலகமாகவும் இருக்கும் RWAன் 100 உறுப் பினரும் புதிய தேர்தல் முறைப்படி தம்முள் ஒருவரை RWAன் தலைவராக தேர்ந்தெடுப்பர். தலைவர் பதவிப் பெயர் MPU பதவிக்காலம் 5 ஆண்டுகள். ஒவ்வொரு பஞ்சாயத்தும் ஒரு பஞ்சாயத்து யூனியனுடன் இணைந்தும் தனித்தனியேயும் செயல்படும். MPU ப.யூ மன்றத்தின் உறுப்பினராகவும் செயல்படுவார்.

பஞ்சாயத்து யூனியன் (ப.யூ): 10 RWAக்கள் அதாவது 10X100 = 1000 வாக்காளருக்கு ஒரு ப.யூ இருக்கும். ப.யூனியனில் உள்ள 10 RWAக்களும் இதன உறுப்பினராவர். ஒவ்வொரு ப.யூனியனின் 1000 உறுப்பினரும் தம்முள் ஒருவரை புதிய தேர்தல் முறைப்படி ப.யூ மன்றத் தலைவராக (MLB) தேர்ந்தெடுப்பர். MLBயின் பதவிக்காலம் 5 ஆண்டுகள். இவர் நகராட்சி மன்றத்தின் உறுப்பினராகவும் செயல் படுவார். 10 ப. யூனியன் அதாவது 100 பஞ்சாயத்துக்கள் சேர்ந்தது (அதாவது 100X100 = 10,000 வாக்காளாகட்கு) ஒரு நகராட்சி. ப.யூகள நகராட்சியுடன் இணைந்தும் தனித்தனியேயும் செயல்படும். நகராட்சி மன்றத்தில் 10 MLBக்கள் உறுப்பினராகயிருப்பர் பெரிய பெரிய நகரங்களில் கூட 10,000 வாக்காளர்கட்கு ஒரு நகராட்சி தனித்து இயங்கும்.

நகராட்சி மன்றம் : நகரமன்றத்தின் 10 உறுப்பினரும் தம்முள் இருவரை நகர் மன்றத் தலைவர் பதவிக்கு பிறந்த தேதி சீனியாரிடிப்படி அனுமதிப்பர். நகராட்சியில் உள்ள 100 RWAககளின் PCRகள் 2000 பேரும் நகர் மன்றத் தலைவரை புதிய தேர்தல் முறையில் தெரிவு செய்வர். அதிக வாக்குகள் பெறுபவர் MCH. 2வது நிலையில் வருபவர் MVC இப்படி 10 MLBக்கட்கும் 5 வருடங்களில் MCH / MVC பதவிகளில் ஒன்று நிச்சயம் கிடைக்கும் MCH/MVC பதவிகட்கு பதவிக் காலம் ஓராண்டு மட்டும். மாவட்டத்திற்கு ஒரு MPL / வட்டத்திற்கு ஒரு MLA இருப்பர். MPL என்பவரை மாவட்டத்திலுள்ள நகர் மன்ற உறுப்பினர்கள் (MLB) க்களும் MLA என்பவரை வட்டத்திலுள்ள பஞ்சாயத்து யூனியன் மன்ற உறுப்பினர்கள் (MPU) க்கள் புதிய தேர்தல் முறையில் தேர்ந்தெடுப்பர். MPU, MLB, CM மற்றும் PM நால் வரையும் மக்களே நேரடியாக தேர்ந்தெடுப்பர்.

(தொடரும்)

Phone : 65465

# FRIEND - IN - NEED JOURNA[L]

The ultimate goal of the journal is to make the pe[ople] utter God's name of one's choice incessantly and [with] deep devotion and faith as HE is not only the Frien[d-in-] need but also the Friend-in-deed to every one [...] In Tamil-Friend-in-need means the friend of the so[ul] Vuyir Thozhar (உயிர் தோழர்) Journal offers Part time jo[bs] with bonus and pension to all. Rules book Rs. 3/-by M[.O.]

No. 9602 Dated
20-7-1996 & 5-8-96




Price Rs 2-00

ENGLISH & TAMIL FORTNIGHTLY
Regd. No. RNI/033551/76
Postal TN/TBM/46

To

Mrs C.K.Gariyali IAS
Commissioner, Archives
& Historical research
Madras-8

If undelivered please return to Sri K.R. Swaminadhan, (Phone : 6 5 4 6 5 5) Editor, Printer & Publisher at Sri Mahaganapathi Printers (Job & Journal works) at No. 10. Vivekanandanagar, Inner Ring Road, Kolathur Post, Madras-600099.



பாலைப் பார்க்கும்போது அதனுள் தயிர், வெண்ணெய் நெய் இருப்பதை நாம் எப்படி உணருவதில்லையோ அதுபோல பசுவைப்பார்க்கும் அளவில் அதன் அங்கங்களில் அனைத்து தேவர்களும் இருப்பதை நாம் அறிவதில்லை பசுவின் பெருமையை விளக்க தனி புத்தகமே தேவை. பசுவை வலம் வந்து அதற்கு புல் அவத்திக்கீரை முதலியவற்றை அன்புடன் கொடுக்க சகல விருப்பமும் நிறைவேறும் என்பது சான்றோரின் ஒருமித்த கருத்து இதன் பெருமையை பெரிய புராணத்திலும் சண்டிகேசவரர் நாயனார் சரித்திரத்திலும் காணலாம்.